## மோட்டார் விபத்து கோருரிமை தீர்ப்பாயம், (சார்பு நீதிமன்றம்) செஞ்சி

**எம். சி.ஓ.பி.எண். 12/2017** **நாள். 25.09.2023**

2023ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 25ம் நாள் மனுதாரர் தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | சங்கீதா | தொழில் | |
| த. பெ./க.பெ. | காத்தவராயன் | சாதி | |
| கிராமம் | மலையரசன்குப்பம் | மதம் | இந்து |
| வட்டம் | | வயது | 25 |

**ம..சா.1**

**3 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1 மற்றும் 2 ம் எதிர்மனுதாரரிடம் தான் நான் நஷ்டயீடு கோரியுள்ளளேன் என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்யும் போது 3 ம் எதிர்மனுதாரரை தரப்பினராக சேர்க்கவில்லை. என் கணவர் விபத்தின் போது ஒட்டி சென்ற வாகனம் அவரின் நண்பரிடம் வாங்கி சென்றார். என் கணவர் விபத்தின் போது ஓட்டி சென்ற வாகனத்தை 3 ம் எதிர்மனுதாரரிடம் இருந்து விலைக்கு வாங்கி பெயர் மாற்றம் செய்யாமல் ஓட்டி வந்தார் என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக தாக்கல் செய்த இறுதி அறிக்கை யில் என் கணவரின் கவனகுறைவால் தான் விபத்து ஏற்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. என் கணவர் ஓட்டி சென்ற வாகனத்தை விபத்தின் போது காப்பீடு செய்யப்பட்டிருந்தது. நான் 1 மற்றும் 2 எதிர்மனுதாரிடம் தான் நஷ்டயிடு கேட்கமுடியும் என்றாலும், 3ம் எதிர்மனுதாரரிடம் நஷ்டயீடு கோரமுடியாது என்றால் சரியல்ல. இவ்வழக்கிற்கும் 3ம் எதிர்மனுதாரருக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. வழக்கிற்கு 3ம் எதிர்மனுதாரர் அவசியமற்ற தரப்பினர் என்பதால் அவரை இவ்வழக்கில் சேர்த்துள்ளது தவறு என்றால் சரியல்ல. விபத்திற்கு டாடா ஏசி வாகன ஓட்டுநர் காரணம் என்பதால் எனக்கு 2ம் எதிர்மனுதாரர் தான் நஷ்டயீடு வழங்கவேண்டும் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. நான் கோரியுள்ள நஷ்டயீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல. விபத்து டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுநரால் ஏற்பட்டுள்ளது என்பதால் 3 ம்எதிர்மனுதாரர் நஷ்டயீடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல.

**4 ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

விபத்து அடுக்கம் என்ற ஊரில் நடந்தது. விபத்தை நான் நேரில் பார்க்கவில்லை. என் கணவர் விபத்தின் போது ஓட்டி சென்ற வாகனம் அவரின் நண்பருக்கு சொந்தமானது. அந்த நண்பரின் பெயர் எனக்கு தெரியாது. என் கணவருடன் வேறு யாரும் சென்றார்களா என்று எனக்கு தெரியாது. என் கணவர் சென்ற இருசக்கர வாகனத்தின் மீது பின்னால் வந்த டாடா ஏசி வாகனம் மோதிவிட்டது. என் நிரூபண வாக்குமூலத்தில் டாடா ஏசி வாகனத்தின் ஓட்டுநர் தான் விபத்திற்கு காரணம் என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். விபத்திற்கு டாடா ஏசி வாகனம் காரணம் என்பதால் எனக்கு 1, 2 எதிர்மனுதாரர் தான் நஷ்டயீடு வழங்கவேண்டும் என்றால் அனைத்து எதிர்மனுதாரர்களும் வழங்கவேண்டும். 4 ம் எதிர்மனுதாரர் எனக்கு இழப்பீடு வழங்கவேண்டியதில்லை என்றால் சரியல்ல. விபத்து சம்பந்தமாக ஐயப்பன் என்பவர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். என் கணவர் ஜே.சி.பி ஆபிரேட்டராக வேலை செய்தார். என் கணவர் ஜே.சி.பி ஆபிரேட்டராக வேலை செய்து மாதம் ரூ. 15 ஆயிரம் சம்பாதித்தார் என்பதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. விபத்து நடக்கும் போது என் கணவருக்கு வயது 29 ஆகும். நான் கோரியுள்ள நஷ்டயீடு தொகை அதிகம் என்றால் சரியல்ல . 4 ம் எதிர்மனுதாரரை பொறுத்து வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.